# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2017–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16–ம் தேதி (16.08.2017) புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது .

கூட்டத்தில் கலந்து கொண்டவர்

திரு.தே. கிருஷ்ணமூர்த்தி
தனி அலுவலர் / ஆணையாளர்
குளச்சல் நகராட்சி

**பொருள் எண்.1**

இந்நகராட்சிக்கு, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்துவதற்காக, சைமன்காலனி கிராமம் புல எண்.204/1 உப்பளம் புறம்போக்கு நிலத்தில் 1.20.00 ஹெக்டேர் நிலம் ஒதுக்கீடு செய்து, முன் நுழைவு அனுமதி வழஙகுவதை தடுத்து நிறுத்தும் வகையில், லியோன் நகர் பொது மக்கள் நீதி மன்றம் செல்வதை தடுக்கும் பொருட்டு, சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் கேவியட் (Caveat) மனு தாக்கல் செய்த வகையில் ரூ.5000/–ம் மற்றும் இரணியல் உரிமையில் நீதி மன்றம் மற்றும் பத்மனாபபுரம் சார்பு நீதிமன்றம் ஆகியவற்றில் கேவியட் மனுக்கள் தாக்கல் செய்த வகையில் ரூ.7000/–ம் சேர்த்து மொத்தம் ரூ.12,000/–ஐ வழக்கறிஞர் கட்டணமாக வழஙக கேட்டு சம்மந்தப்பட்ட வழக்கறிஞர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது.

எனவே மேற்படி தொகை ரூ.12,000/–ஐ சம்மந்தப்பட்ட வழக்கறிஞர்களுக்கு வழஙகவும், மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.524/2012/எச்1

**தீர்மானம் எண்.1713 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

குளச்சல் நகராட்சி, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை, அவர்களின் கடித ந.க.எண்.30322/2012/இ3 நாள்:26.07.2017–ன் படி, நகராட்சி நிர்வாக ஆணையரக புதிய அலுவலக கட்டுமான பணிக்கு முதல் நிலை நகராட்சிக்கான கூடுதல் பஙகுத்தொகை ரூ.461000/–ஐ செலுத்த கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகையினை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1858/2013/பி1

**தீர்மானம் எண்.1714 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கை பணிகள் ஆய்வு செய்ய 02.08.2017 அன்று இணை இயக்குநர், சுகாதாரப் பணி அவர்கள் வந்து ஆய்வின் போது தினசரி DBC பணியாளர்கள் கூடுதலாக வீடுகளை பார்க்கவும், அவசரக்குழு அமைத்திடவும் போர்க்கால அடிப்படையில் டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி பட்டியலின்படி கூடுதலாக சுயஉதவிக்குழுக்கள் மூலம் பணியாளர்களை பெற்று டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கை பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. ஆகவே மேலும் கூடுதலாக 15 DBC பணியாளர்களை 89 நாட்களுக்கு பணியமர்த்தவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.625000/—க்கும் மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙகவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1182/2017/எச்1

**தீர்மானம் எண்.1715 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

இந்நகராட்சிக்கு சொந்தமான உப்பளம் உரக்கிடஙகில் குப்பைகளை கொட்டுவதற்கு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருவதாலும், திடக்கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாலும் தற்போது வீடு வீடாக குப்பைகளை தரம் பிரித்து வாஙகப்பட்டு வருகிறது. தரம் பிரிக்கப்பட்ட குப்பைகளை உரமாக்குவதற்கு ஏதுவாக இ.எம்.1 சொல்யூசன் (EM1 Solution) பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது போதுமான அளவில் இருப்பில் இல்லாததால் 50 லிட்டர் இ.எம்.1 சொல்யூசன் அரசு அஙகீகாரம் பெற்ற கூட்டுறவு அச்சகத்தில் இருந்து வாஙகுவதற்கும் மற்றும் 50 கிலோ கருப்புக்கட்டி வாஙக உத்தேச செலவுத்தொகை ரூ.40000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 1210 /2017/எச்1

**தீர்மானம் எண்.1716 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24—ல் வெள்ளியாகுளம் பயணிகள் நிழற்கூடம் அருகில் அமைந்துள்ள திறந்த வெளி கிணறு பல வருடஙகளாக தூர்வாரி சுத்தப்படுத்தாமல் மாசுபட்டு திறந்த நிலையிலேயே உள்ளதால், பொது மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே, பொது மக்கள் நலன் கருதி , மேற்படி கிணற்றை தூர் வாரி, சுத்தப்படுத்தி, கிணற்றுக்கு மேல்மூடி அமைத்து, மின் மோட்டார் பொருத்தி பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பணியினை மேற்கொள்வதற்காக, தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.2,25,000/—

க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1303/2017/இ1

**தீர்மானம் எண்.1717 அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.6

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட உபவிதிகள் 2016 நிறைவேற்றப்பட்டு, ஆட்சேபனை தெரிவிக்கும் பொருட்டு நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டதில் எவ்வித ஆட்சேபனையும் பெறப்படவில்லை. மேலும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.15534–3/2017/தி3 நாள் : 10.07.2017–ன் படி, திடக்கழிவு மேலாண்மைத் திட்ட உபவிதிகளுக்கு அனுமதியும் வழஙகப்பட்டுள்ளது. எனவே திடக்கழிவு மேலாண்மைத் திட்ட உபவிதிகள் 2016–ஐ மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும் ஒரு பக்கத்திற்கு ரூ.2100/– க்கு வீதம் 8 பக்கத்திற்கு ரூ.16800/– செலுத்தப்பட வேண்டும். இதில் ஏற்கனவே ரூ.2100/–க்கு காசோலை தயார் நிலையில் உள்ளதால் மீதமுள்ள தொகை ரூ.14,700/–ஐ நகராட்சி பொது நிதியில் இருந்து செலுத்தி மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

ந.க.எண்.362/2017/எச்1

**தீர்மானம் எண்.1718 அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.7

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைகளை தரம் பிரிப்பதற்கு கையுறைகள் வாஙகுவதற்கு உத்தேச தொகை ரூ.12,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1324/2017/எச்1

**தீர்மானம் எண்.1719 அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.8

இந்நகராட்சியின் 2015–16–ம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை புத்தகஙகள் கணணியில் தயார் செய்து கொடுக்கப்பட்ட வகையில் ரூ.14400/– திவிக் கம்பியூட்டர் சென்டர் நாகர்கோவில் நிறுவனத்திற்கு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.942/2012/எச்1

**தீர்மானம் எண்.1720 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

இந்நகராட்சி அம்மா உணவகத்திற்கு 2017–18–ம் ஆண்டிற்கு தேவையான மளிகை பொருட்கள், காய்கறிகள், பால், கேஸ் சிலிண்டர், பணியாளர்கள் ஊதியம் மற்றும் இதர பொருட்களை வாஙகுவதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.35,00,000/– க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1115/2015/அ1

**தீர்மானம் எண்.1721 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

இந்நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோயில் பகுதியில், வெள்ளிப்பிள்ளையார் கோவில் முதல் கொட்டில்பாடு வரை செல்லும் சாலை மிகவும் மோசமாக சேதமடைந்து காணப்படுவதால், பொது மக்கள் மற்றும் வாகனஙகள் செல்வதற்கு மிகுந்த சிரமம் ஏற்பட்டுள்ளதுடன், மேற்படி சாலையானது அணுகு சாலையாக உள்ளதால் வாகன போக்குவரத்தும் தடைபட்டுள்ளது. எனவே பொது நலன் கருதி, மேற்படி பகுதியில் குண்டும், குழியுமாக உள்ள இடஙகளில் Wet Mix Macadam(WMM) பணியினை, ரூ.20000/– மதிப்பீட்டில் செய்வதற்கும் அவசர அவசியம் கருதி, நகராட்சி சட்ட விதி 15–ன் கீழ், மேற்படி பணியினை திரு.C.செல்லநாடார், ஒப்பந்ததாரரிடம் ஒப்படைப்பு செய்து (Offer work) மேற்கொண்டுள்ளதற்கும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1098–1/2017/இ1

**தீர்மானம் எண்.1722 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

மகாராஜா மார்த்தாண்டவர்மா மற்றும் டச்சு படையினருக்கு இடையே நடைபெற்ற போரில் வெற்றி பெற்றதன் நினைவாக குளச்சல் கடற்கரை பகுதியில் 1741 ஜுலை 31–ல் நிறுவப்பட்ட வெற்றித்தூண் நினைவு நாள் ஒவ்வொரு ஆண்டும் ஜுலை 31–ம் தேதி Ninth Battalion The Madras Regiment (Travancore) படையினரால் கொண்டாடப்படுவதை முன்னிட்டு, மேற்படி வெற்றித்தூண் நிறுவப்பட்டுள்ள பூஙகா பகுதியில் வர்ணம் பூசுதல், புல்தரை பராமரித்தல், நீர் ஊற்றுக்கள், வெற்றிசின்ன தூண் மற்றும் நினைவு சிற்பஙகளை ஆயில் பெயிண்டிங மற்றும் வண்ணக் கலவைகளை கொண்டு அழகுப்படுத்துதல் ஆகிய பணிகளை அவசர அவசியம் கருதி விலைப்புள்ளிகள் பெற்று அதன்படி ரூ.70,000/–க்கு மதிப்பீடு தயார் செய்து நகராட்சி சட்ட விதி 15–ன் கீழ் பணி மேற்கொண்டதற்கும், மேற்படி பணிணை திரு.பாலகிருஷ்ணன் ஒப்பந்ததாரரிடம் ஒப்படைத்து பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவுத்

தொகையினை நகராட்சி பொது நிதியின் கீழ் வழஙகுவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1224–1/2017/இ1

**தீர்மானம் எண்.1723 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

இந்நகராட்சியில் 2017–18–ம் ஆண்டு குடிநீர் வினியோக வருடாந்திர பராமரிப்பு கூடுதல் பணிகள் மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.50,000/–க்கு மன்றம் தனது தீர்மானம் எண். 1708 நாள் : 31.07.2017–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் மேற்பணிக்கு 11.06.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு,

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.C.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.02% குறைவு |
| 2. | திரு.S.வரதராஜன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 1.00% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.C.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.02% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழுஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1041/2017/இ2

**தீர்மானம் எண்.1724 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

இந்நகராட்சி கணணி பிரிவில் இயஙகி வரும் கணணிகள், சர்வர் மற்றும் பிரிண்டர்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்வதற்கு ஏதுவாக, 2017–18–ம் ஆண்டிற்கான வருடாந்திர பராமரிப்பு (AMC) மேற்கொள்வதற்கான உத்தேச செலவினம் ரூ.73,000/–க்கு மன்றம் தனது தீர்மானம் எண்.1641 நாள் ; 30.03.2017–ன் மூலம் ஒப்புதல் வழஙகியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 10.08.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின் வருமாறு,

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | M/s. ACT Automation<br>174.S.K.P Building<br>Opp.Union Bank of India | மதிப்பீட்டு விகிதம் |

| | | |
|---|---|---|
| | Vadasery | |
| 2. | M/s. Data Point<br>181,Classic Complex<br>Opp.Anna Stadium,<br>Nagercoil | மதிப்பீட்டை விட<br>8.28% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.ACT Automation, Vadasery நிறுவனத்தார் மதிப்பீட்டு விகிதத்திற்கும் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.544/2006/அ2

**தீர்மானம் எண்.1725 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.14**

இந்நகராட்சியில் ஒப்பந்ததாரராக பணிபுரிந்து வரும் திரு. ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ் ஒப்பந்ததாரரின் பில்லில் பிடித்தம் செய்யப்பட்ட தொகைகள் மற்றும் பணிகள் கிடைக்காமல் செலுத்தப்பட்டுள்ள வைப்புத் தொகைகள் ரூ.5,55,265/— காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் Vol-2-ல் பதிவுகள் உள்ளதால் மேற்கண்ட தொகையினை ஒப்பந்ததாருக்கு திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.55/2017/பி1

**தீர்மானம் எண்.1726 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.15**

இந்நகராட்சி கணணி பிரிவில் தட்டச்சரின் பயன்பாட்டில் உள்ள பிரிண்டரில் பழுது நீக்கப் பணியினை மேற்கொள்வதற்கான உத்தேச செலவினம் ரூ.3900/—க்கு, மன்றம் தனது தீர்மானம் எண்.1701 நாள் : 31.07.2017—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பழுது நீக்கப் பணியினை மேற்கொள்வதற்கு 16.08.2017 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு,

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | M/s. ACT Automation<br>M.S. Road<br>Vadasery | 3900/- |
| 2. | M/s. Data Point<br>Opp.Anna Stadium,<br>Nagercoil | 4000/- |
| 3. | M/s. ACE Systems,<br>W.C.C Road,<br>Nagercoil | 4250/- |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில், M/s. ACT Automation,Vadasery நிறுவனம் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.544/2016/அ2

**தீர்மானம் எண்.1727 அனுமதிக்கப்பட்டது.**

தனி அலுவலர்/ஆணையாளர்
குளச்சல் நகராட்சி

பொருள் எண்.1

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் ந.க.எண்.15891/2016/எச்1 நாள் :19.04.2017–ம் தேதிய கடிதத்தில் தமிழ் நாட்டில் உள்ள அனைத்து நகராட்சிகளிலும் அதன் தரத்திற்கு ஏற்றவாறு நகராட்சி பொதுப் பணி பிரிவின் விதிகளின் படியும், நகராட்சி நிலைகளின்படியும் நகராட்சி மேலாளர், வருவாய் அலுவலர், கணக்கர் மற்றும் வருவாய் ஆய்வர் ஆகிய பணியிடஙகளை தோற்றுவித்தல் மற்றும் நகராட்சிகளின் நிலைகளுக்கு ஏற்றவாறு பணியிடஙகளின் நிலையினை உயர்த்தவும் செயற்குறிப்புகள் அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி,

1. இந்நகராட்சி அரசாணை எண்.238 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு துறை) நாள்:02.12.2008–ன் படி இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

2. பணியிட விவரம்

| வ.எண் | தற்போதுள்ள பணியிட விவரம் | தற்போதுள்ள வகுப்பு | இரண்டாம் நிலையில் இருந்த முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதால் தரம் உயர்த்தப்படவேண்டிய பணியிட வகுப்பு விவரம் |
|---|---|---|---|
| 1 | மேலாளர் | IV | II |
| 2 | வருவாய் அலுவலர் | – | IV |
| 3 | கணக்கர் | – | IV |
| 4 | வருவாய் ஆய்வாளர் | – | V |

3. ஊதிய விவரம்

| வ.எண் | பணியிட விவரம் | தற்போது பெற்று வரும் ஊதிய விகிதம் | நிலை உயர்த்தப்பட்டால் வழஙகப்படவேண்டிய உதிய விகிதம் |
|---|---|---|---|
| 1 | மேலாளர் | 9300-34800+4200 | 9300-34800+4500 |
| 2 | வருவாய் அலுவலர் | – | 9300-34800+4200 |
| 3 | கணக்கர் | – | 9300-34800+4200 |
| 4 | வருவாய் ஆய்வாளர் | – | 5200-20200+2600 |

மேலும் இந்நகராட்சி முதல் நிலை நகராட்சியாக இருப்பதாலும் ஒவ்வொரு ஆண்டும் நகராட்சியின் வருவாய் அதிகரித்துக் கொண்டு வருவதாலும் இந்நகராட்சிக்கு, கணக்கர், வருவாய் அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் போன்ற புதிய பணியிடஙகள் மிகவும் அவசியமாக தேவைப்படுகிறது. எனவே இந்நகராட்சியின் தரத்திற்கு ஏற்றவாறு மேலாளர் பணியிடத்தை வகுப்பு 2–ல் உயர்த்தவும், வருவாய் அலுவலர் மற்றும் கணக்கர் பணியிடஙகளை வகுப்பு 4–லும், வருவாய் ஆய்வாளர்

பணியிடத்தை வகுப்பு 5–லும் புதியதாக தோற்றுவிக்கவும் அதற்கான செயற்குறிப்பினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1023/2017/சி1

**தீர்மானம் எண்.1728 அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

இந்நகராட்சியின் பொதுச் சுகாதாரப் பிரிவில் பணி புரிந்து வரும் துப்புரவு பணியாளர்களுக்கு சுகாதாரப் பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான கையுறைகள் (40 ஜோடிகள்) விநியோகம் செய்வதற்கு 16.08.2017 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி 3 நிறுவனங்களில் இருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி விவரம் ஜோடி 1–க்கு ரூ. |
|---|---|---|
| 1. | M/s.அல்மாஸ் டிரேடர்ஸ்<br>9, கிழக்கு ரதவீதி,<br>சிவகாசி | 310/– |
| 2. | M/s.பேன்சி ஏஜென்சீஸ்,<br>467, மெயின் பஜார்,<br>விருதுநகர் | 290/– |
| 3. | M/s.பயோனியர் குட்ஸ்,<br>ஹார்டுவேர்ஸ்,<br>112, பாரதி நகர் | 325/– |

மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் M/s.பேன்சி ஏஜென்சீஸ், விருதுநகர் நிறுவனத்தாரின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதால், ஷை விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு, ஷை நிறுவனத்திற்கு சப்ளை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

ந.க.எண்.1324/2017/எச்1

**தீர்மானம் எண்.1729 ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

இந்நகராட்சிக்கு கல்குளம் வட்டம், சைமன்காலனி கிராமம் புல எண்.204/1 உப்பளம் புறம்போக்கு நிலத்தில் 1.20.00 ஹெக்டேர் நிலம், திடக்கழிவு மேலாண்மை திட்டம், மண்புழு உரம் தயாரிக்கும் கூடம் மற்றும் விஞ்ஞான ரீதியில் நிரப்புதல் பணி ஆகியவற்றை செயல்படுத்தும் பொருட்டு, நகராட்சிக்கு நில உரிமை மாற்றத்தை பின்னிறுத்தி முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்படி

நிலத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்துவதற்கு எதிராக புனித காணிக்கை மாதா திருத்தல பங்கு தந்தை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடர்ந்துள்ள வழக்கு எண்.15172/2017–க்கு நகராட்சி சார்பாக ஆஜராகும் அரசு கூடுதல் வழக்கறிஞர் (Addl.Govt.Pleader) திரு.N.S.கார்த்திகேயன், எம்.எல்., அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.9500/–ஐ வழுங்கவும், மேற்படி செலவினத்தை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1351/2017/இ1

**தீர்மானம் எண்.1730 அனுமதி வழுங்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் நவீன மீன் மார்க்கெட்டில் உள்ள கடைகளுக்கு 18.08.2017 ஏலம் நடைப்பெற்றதில் முதல் தள கடை எண்.5–க்கு கேட்டுள்ள ஏலம் விவரம் பின்வருமாறு,

| வ.எண் | பெயர் | கேட்கப்பட்டுள்ள ஏலக்கேள்வி (மாதம் 1–க்கு) | நகராட்சி பொறியாளர் நிர்ணயம் செய்யப்பட்ட அரசாங்க மதிப்பு (மாதம் 1–க்கு) | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி மற்றும் ஏலத்தாரர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| முதல் தளம் கடை எண்.5 | | | | |
| 1 | K.S..நாகராஜன் | 6,700 | 6372/– | K.S..நாகராஜன் 6,700/– |
| 2 | C.லெனின் குமார் | 6,600 | | |

முதல் தளம் கடை எண்.2–க்கு எவரும் டெபாசிட் செலுத்தவில்லை. மேற்படி 2 கடைகளுக்கும் ஒப்பந்தப்புள்ளி எவரும் அளிக்கவில்லை. கலம் (5)–ல் கொடுக்கப்பட்டுள்ள அதிக பட்ச ஏலத்தொகையினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. அரசாங்க மதிப்பை விட கேட்டுள்ள ஏலத்தொகை கூடுதலாக உள்ளது.

ந.க.எண்.216/2017/அ1

**தீர்மானம் எண்.1731 திரு. K.S..நாகராஜன் கேட்டுள்ள உயர்ந்த ஏலக்கேள்வி ரூ.6,700/– ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**பொருள் எண்.5**

குளச்சல் நகராட்சியில் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306–ன் கீழ் இயற்றப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது. மேலும் மேற்படி துணை விதிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை

அவர்களின் ஒப்புதல் பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

ந.க.எண்.1360/2017/எச்1

**தீர்மானம் எண்.1732 ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

இந்நகராட்சி 9–வது மாவட்ட உயர்மட்டக் குழு கூட்டமர்விற்கான தணிக்கை பத்திகளுக்கு பதில்கள் தயார் செய்து ஜெராக்ஸ் எடுத்து ஸ்பைரல் பைண்டிங செய்த வகையில் ரூ.3800/– நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 2869/2013/எச்1

**தீர்மானம் எண்.1733 அனுமதிக்கப்பட்டது.**